26.09.2024 OS.No.71/2012 PW2 Name :.**விஜயசீனிவாசன்**

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் என்ன பதில் போடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் பதிலில் எதையும் மறுத்து என் தகப்பனார் சாட்சியம் கூறவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கில் என் தகப்பனாரை குறுக்கு விசாரணை செய்யாத நிலையில் இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியும். 3ம் பிரதிவாதியின் பதிலை நான் மறுத்து சாட்சியத்தில் கூறாததற்கு என்ன காரணம் அது பற்றி எனக்கு தெரியாது. என் பெற்றோர்களுக்கு நான் மட்டும் தான் ஒரே மகன்.
2. உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. என் பெற்றோர்களின் வாரிசு சான்றிதழ் எதையும் வாங்கவில்லை. இனிமேல் தான் வாங்கவேண்டும். இந்த வழக்கில் இறந்து போனவரின் வாரிசை சேர்ப்பதற்காக போட்ட மனுவில் தாக்கல் செய்துள்ள பதிலில் எனக்கு உடன் பிறந்த 2 சகோதரர்கள் ரவி, மற்றும் மருத்துவர் முரளி என்பவர்கள் இருப்பது பற்றி கூறியுள்ளது எனக்கு தெரியாது. ரவி என்பவர் இறந்து அவருக்கு வாரிசு இருப்பதாக கூறியுள்ளார்கள் என்றால் அவ்வாறு எந்த சதோரரும் இல்லை.
3. என் பெற்றோர்களுக்கு சொந்தமான வேறு சொத்துகள் உள்ளது. என் பெற்றோர்கள் சொத்துகள் குறித்து என் பெயருக்கு ஆவணம் எழுதி வைத்துள்ளர்கள். வேறு சொத்துகளை ஆவணங்கள் எழுதாமல் விட்டு இறக்கவில்லை. உண்மையை மறைப்பதற்காக வாரிசு சான்று வாங்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குறித்து என் பெற்றோர்கள் ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். வழக்கில் அது பற்றி கூறாமல் அந்த ஆவணங்கள் வழக்கில் தாக்கல்

செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன்.

4. 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் தெரியவில்லை. உயிருடன் அவர் இருக்கிறாரா என்று தெரியவில்லை. வழக்கு சொத்தில் 3ம் பிரதிவாதி தான் தற்போது குடியிருக்கிறார். 5ம் பிரதிவாதி மனு போட்ட காலத்திலிருந்தே வெளிநாட்டில் குடியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பதிலில் அந்த விவரத்தில் கூறியுள்ளதையும் அது தொடர்பாக நீதிமன்ற அழைப்பாணை திரும்பி வந்த விவரத்தையும் தெரிந்துகொண்டு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் இடத்திலிருந்து தாவா சொத்து 1 கி.மீ தொலைவில் இருக்கிறது.
5. வழக்கு சொத்து குறித்து ஏற்கனவே பல்வேறு வழக்குகள் நடந்து முடிவுக்கு வந்துள்ளது. தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1985 ஆண்டிலிருந்து சென்ற ஆண்டிற்கு வரை உள்ள வில்லங்கத்தை சரிபார்த்துள்ளேன். தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதியின் மனைவி திலகவதி பெயரில் தான பத்திரம் உள்ளது பற்றிய விவரம் நான் போட்ட வில்லங்கத்தில் வரவில்லை. அந்த வில்லங்க சான்றிதழ் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.
6. 2ம் பிரதிவாதி ஸ்ரீதர் என்பவர் மகன் பெயரில் பத்திரம் எழுதியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2011 ஆண்டில் திலகவதி பெயரில் தான பத்திரம் உள்ளதால் அவரை வழக்கில் சேர்க்காமல் இருப்பது வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. சீனிவாசராவ்வின் பிள்ளைகள் எனக்கு பத்திரம் எழுதியுள்ளார்கள்.

சீனிவாச ராவ்வின் வைப்பாட்டின் மருமகள் 2ம் பிரதிவாதி ஆவார். 1, 2 பிரதவாதிகளிடம் நான் சொத்தின் சுவாதீனம் பரிகாரம் கேட்கிறேன்.

7. உமாபதியின் மனைவி திலகவதியிடமிருந்து எனக்கு சொத்தின் சுவாதீனம் தேவையில்லை. திலகவதி என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 129/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை. என்னுடைய உடன் பிறந்த மற்ற 2 சகோதரர்களையும் திலகவதியையும் வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து 1985 லிருந்து வழக்கு பிரச்சனை உள்ளது.

8. தாவா சொத்திற்கான பட்டா ராஜம்மாள் பெயரில் உள்ளது. 1995 ல் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு ராஜம்மாள் பெயரில் உள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் மூலமாக ஆதியில் சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என உத்தரவாகியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் பதில் பற்றி எனக்கு தெரியாது. 1984 லிருந்து தாவா சொத்து 1ம் பிரதிவாதி வகையாரவிடம் சுவாதீனத்தில் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை.

9. 25.07.2022 ல் 2ம் பிரதிவாதி சந்தோஷ் குமார் மற்றும் சேகர் பெயரில் பத்திரம் ஏற்படுத்தியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. அது செல்லாது என்று தான் அ.வ.எண். 129/2023 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து என் பெயரில் என் எழுதி வைத்ததாக கூறும் ஆவணத்தையும் வில்லங்க சான்றிதழையும் அடுத்த வாய்தாவில் ஆஜர்படுத்த முடியும்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஆவணங்களை தாக்கல் செய்ய ஒத்திவைக்கபடுகிறது).

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/09/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

B RAJA

Digitally signed by B RAJA
Date: 2024.09.26 16:49:16 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.